# வெங்காயம், பூண்டு!

வாசிக்க: 1 யோவான் 1:1-10

*"நமக்குப் பாவம் இல்லை என்போமென்றால்
நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்ளுகிறோம்" (1 யோ 1:8)*

கிறிஸ்தவச் சீடத்துவப் பயிற்சிக் கூடுகைகளில் அடிக்கடி சொல்லப்படும் திரு வசனம் 2 கொரிந்தியர் 5:17, "ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுப்படைப்பாய் இருக்கிறான்; பழையன ஒழிந்தன, எல்லாம் புதிதாயின!" இத்திருவசனப்பகுதியில் வாக்களிக்கப்பட்டுள்ள முழுமையான மாற்றம் உங்களுக்கு எட்டாத கனியாயிருக் கலாம். ஆனாலும், "எப்பொழுதுதான் மாறுவேனோ?" என்ற கேள்வி உங்களை வாட்டிக்கொண்டேயிருக்கிறது.

கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்தினால் கிட்டும் மறுபிறப்பு நம்மைப் பாவம் செய்யமுடியாமல் மாற்றுவதில்லை. பாவம் செய்வது இயலாமல் போகுமானால், புதிய ஏற்பாட்டுத் திருக்கடிதங்களை எழுதியவர்கள் கோபம், பொறாமை, பாலினப் பாவங்கள், பொருளாசை போன்றவற்றைத் தழுவக்கூடாதென்று வாசகர்களை எச்ச ரிக்கத் தேவையில்லையே! இந்நிருபங்கள் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட விசுவாசிகளுக்கே எழுதப்பட்டவை (ரோ 1:2; 1 கொரி 1:2; 2 கொரி 1:1; எபே 1:1; பிலி 1:1; முதலியன.) நமது மண்ணுலக வாழ்வில் பாவமற்ற பூரண நிலை வாக்களிக் கப்படவே இல்லை. மாறாக, "நாம் எல்லாருமே அநேகக் காரியங்களில் தவறுகிறோம்" என்றுதான் அழுத்தமாய்க் கூறுகிறது திருமறை (1 யோ 1:8; யாக் 3:2அ).

"என்னில் தீமை உண்டு" என்று அறிக்கையிடுகிறான் அப்போஸ்தலன் பவுல் (ரோ 7:21). அவனது ரோமர் நிருபம்தான் சீர்த்திருத்தப் புரட்சிக்கென மார்ட்டின் லூத்தருக்குப் (1483-1546) பாடப்புத்தகமாக அமைந்தது. விசுவாசத்தினால் கிடைக்கும் இரட்சிப்பை அவர் பிரசங்கித்ததற்காய் அவரைத் தாறுமாறாய் எதிர்த்தார்கள். ஆனாலும் அவர் தமது நெருங்கிய நண்பர்களிடம் கூறியது: "வெளியேயிருந்து வருவதைவிட எனக்கு உள்ளே இருப்பதற்கே அதிகம் பயப்படு கிறேன்!" மூன்று நூற்றாண்டுகள் கழித்து, மெதடிஸ்டு சபையை நிறுவிய ஜான் வெஸ்லி (1703-1791) எழுதியது: "எனது எதிரிகள் யாவரையும்விட எனக்குள்ளேயே இருக்கும் விரோதிக்குத்தான் அதிகம் பயப்படுகிறேன்!"

குணம் மாறுவது நெடுகவே நடக்கும் காரியம். அது மறுபிறப்பு என்ற குறிப்பான நிகழ்வில் தொடங்குகிறது. நாம் ஏனோதானோ என்றோ, ஒன்றும் செய்யாமலோ இருக்கக்கூடாது. இஸ்ரவேலர் தங்களிடமிருந்து எகிப்தை வெளியேற்றுவதைவிட தாங்கள் எகிப்திலிருந்து வெளிவருவதே சுலபமாயிருந்தது! எகிப்தின் வெங்காயமும் வெள்ளைப்பூண்டும் இனி வேண்டாம் என்று சொல்லிவிடுவது அவர்களுக்கு எளிதா யில்லை (எண் 11:5). அவர்கள் அந்த ஆசையோடு போராடவேண்டியதிருந்தது. அப்படியே கிறிஸ்தவ வாழ்விலும் ஒரே நாளில் நாம் குழந்தைப்பருவத்திலிருந்து முதுமையடைந்துவிட முடியாது. கடவுளுடைய இரக்கத்தையும் அவரது திருவசன மெனும் பாலையும் ருசித்தவர்களாய், நாம் எல்லாவிதத் தீய குணத்தையும் வெறுத்துத் தள்ள நெடுகவே முழு மனதாய் முயற்சியெடுக்கவேண்டும் (1 பேது 2:1-3).

*குறை யாவும் நீக்கிட, நாதா, நீர் சம்பூரணர்;*
*திக்கற்றோரைத் தாங்கிட நீரே மா தயாபரர்;*
*நான் அசுத்த பாவிதான், நீரோ தூயர் தூயரே;*
*நான் அநீதி கேடுள்ளான், நீர் நிறைந்த நித்தியரே!* (பாமாலை)
*— சார்ல்ஸ் வெஸ்லி, 1707-1788*